# ஆதி பிதா ஹஜ்ரத் ஆதம் (அ)

*ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்கள் மனித இனத்தினர் அனைவருக்கும் தந்தையாக விளங்குபவர். இதன் காரணமாகவே அவர்களை அபுல் பஷர் என்று கூறு கிறோம். அவர்களுடைய படைப்பு மனித இனத்தின் துவக்கமாகும். அவர்க ளைப்பற்றிய வரலாற்றினை அறிந்துகொள்வது மனித இனத்தவர்களுடைய படைப்பு பற்றிய வரலாற்றினை அறிவதாகும். அவர்கள் எவ்வாறு பிறந்தார் கள்? அவர்கள் படைக்கப்பட்டபோது என்னென்ன நிலைகள் இருந்தன, அவர்கள் எங்கிருந்தார்கள்? என்னென்ன நிகழ்வுகளை எதிர்கொள்ளவேண்டி யிருந்தது? அவர்களுடைய கொள்கைகள் சிந்தனைகள் என்னவாயிருந்தன? அவர்களுடைய பொறுப்பின்கீழ் அவர்களுடைய மக்கள் எவ்வாறு பிறந்து வளர்ந்தனர்? ஆகிய கேள்விகளுக்கெல்லாம் பதில்களை அறிந்துகொள்வது மனதர்களாகிய நமக்கு மிகவும் முக்கியமானவையாகும். திருக்ஃஃகுர்ஆன் மற்றும் நபிமொழிகளின் வாயிலாக அறியப்பட்ட ஹஜ்ரத் ஆதம் (அ) அவர் களைப்பற்றிய செய்திகள் கீழ்க்காணும் வகையில் உள்ளன:*

## ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களைப் படைக்கும் எண்ணம்

*அல்லாஹ் தஆலா ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களைப் படைக்கவேண்டும் என்று நாடியபோது, அதனைப்பற்றிய செய்தி வானவர்களுக்கு கொடுக்கப்பட்டது. வானவர்களுக்கு ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களைப்பற்றிய உண்மைகள் தெரிந் திராத நிலையில், அவர்களுக்கு பூமியின்மீது அதற்கு முந்தைய காலங்களில் வாழ்ந்த படைப்புகளான ஜின்னுகளுடைய வாழ்க்கை மற்றும் செயல்களைப் பற்றித் தெரிந்திருந்த காரணத்தினால் அவர்கள் அல்லாஹ்விடம் கூறினார்கள், பூமியில் இரத்தம் சிந்தப்பட்டும் குழப்பங்கள் விளைவிக்கும் வகையிலான (ஒரு படைப்பினையா படைக்கப்போகிறாய்?) என்று கூறினர். படைப்புக் கான நோக்கம் அல்லாஹ்வைத் துதிப்பது, அவனுடைய மகிமையை தியா னிப்பது என்றால், அதனை நாங்கள் செய்துகொண்டிருக்கின்றோமே. வான வர்கள் அவ்வாறு கூறியது அல்லாஹ்வின் கேள்விக்கு மாற்றுக் கருத்தாக இருக்கவில்லை. அல்லாஹ் ஒன்றை நாடினால் அவ்விஷயத்தில் அவனு டைய படைப்புகளில் யாராலும் அதில் குறை கூறமுடியாது. வானவர்கள் ஒரு புதிய படைப்பினைப்பற்றிக் கூறப்பட்டபோது அவர்களுடைய கருத்தினைத் தெரிவித்தார்கள். அதற்கு அல்லாஹ் பதில் கூறும்வகையில் கூறினான், நீங் கள் உண்மையினை அறியமாட்டீர்கள், நான் அனைத்தையும் அறிவேன்.*

## ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுடைய படைப்பு

*அல்லாஹ் தஆலா ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களைக் களிமண்ணினால் படைத்தான். அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:*

إِذۡ قَالَ رَبُّكَ لِلۡمَلَٰٓئِكَةِ إِنِّي خَٰلِقُۢ بَشَرٗا مِّن طِينٖ ﴿٧١﴾

*பொருள்: உம்முடைய இறைவன் வானவர்களிடம் நான் களிமண்ணால் ஒரு மனிதனைப் படைக்கப்போகிறேன் (எனக் கூறியபோது (ஸாத்:71)*

*மற்றொரு இடத்தில் கூறுகின்றான்:*

وَلَقَدۡ خَلَقۡنَا ٱلۡإِنسَٰنَ مِن صَلۡصَٰلٖ مِّنۡ حَمَإٖ مَّسۡنُونٖ ﴿٢٦﴾

*பொருள்: பேதகமடைந்த (சுன்டினால் ஓசை வரக்கூடிய) காய்ந்த மண்ணிலிருந்து மனிதனை நாம் படைத்தோம் (அல் ஹிஜ்ரு:26)*

*இன்னுமொரு இடத்தில் கூறுகின்றான்:*

خَلَقَ ٱلۡإِنسَٰنَ مِن صَلۡصَٰلٖ كَٱلۡفَخَّارِ ﴿١٤﴾

*பொருள்: ஓடு போன்று, தட்டினால் ஓசை வரக்கூடிய பேதகமடைந்த களிமண்ணிலிருந்து மனிதனைப் படைத்தோம் (அர் ரஹ்மான்:14).*

*ஒரு நபிமொழியில் இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுடைய படைப்பினைப்பற்றி கூறுகிறார்கள்: அல்லாஹ் தஆலா ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களை இந்தப் பூமியின் பல்வேறு பகுதிகளிலிருந்து பெறப்பட்ட ஒரு கைப்பிடி மண்ணிலிருந்து படைத்தான். ஆகவே, ஆதமுடைய (அ) மக்களும் பல்வேறு வகையான மண்ணின் தன்மைகளைக்கொண்டே படைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் சிவந்த நிறமுடையவர்களாகவும், சிலர் வெள்ளையர்களாகவும் சிலர் கருப்பர்களாகவும், சிலர் மென்மையான சுபாவம் உடையவர்களாகவும் சிலர் கடுமையான இயல்பினையுடையவர்களாகவும் உள்ளனர். சிலர் தீயவர்களாகவும் சிலர் நல்லவர்களாகவும் உள்ளனர் (திர்மிதி)*

## வானவர்கள் ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுக்கு சஜ்தா செய்தனர்

*ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களைப் படைத்தபின் அல்லாஹ் தஆலா வானவர்களை ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுக்கு சஜ்தா செய்யுங்கள் என்று கட்டளையிட்டான், திருக்ஃகுர்அனில் கூறப்பட்டுள்ளது:*

فَإِذَا سَوَّيْتُهُۥ وَنَفَخْتُ فِيهِ مِن رُّوحِى فَقَعُوا۟ لَهُۥ سَٰجِدِينَ ﴿٢٩﴾ فَسَجَدَ ٱلْمَلَٰٓئِكَةُ كُلُّهُمْ أَجْمَعُونَ ﴿٣٠﴾

*பொருள்: நான் அவரை முழுமையாக்கி, அவருக்குள் என்னுடைய உயிரிலிருந்து ஊதியதும் நீங்கள் அனைவரும் அவருக்குச் சிரம் பணிந்திடவேண்டும். வானவர் அனைவரும் அவ்வாறே சிரம் பணிந்தார்கள். (அல் ஹிஜ்ரு:29,30)*

*இந்த சஜ்தா, உண்மையில், அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றும் வகையிலானதாக இருந்தது, ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுக்கு மரியாதையும் கண்ணியப்படுத்தும் வகையிலானதாகவும் இருந்தது. அறிவாற்றலுக்கு அறியாமையின்மீது முன்னுரிமை அளிக்கும் பண்பாகவும் அமைந்தது. ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுக்கு அளிக்கப்பட்ட மரியாதையும் கண்ணியமும் நான்கு முக்கியக் காரணங்களினால் பொருத்தமானதாக உள்ளது.*

1 **அல்லாஹ் ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களைத் தன்னுடைய கரங்களினால் படைத்தான்**
2 **ஆதம் (அ) அவர்களுக்குள் தன்னுடைய ரூஹ் எனும் ஆவியை ஊதினான்**
3 **வானவர்களை அவர்களுக்குச் சிரம் தாழ்த்தி மரியாதை செய்யுமாறு கட்டளையிட்டான்**
4 **படைப்புகளின் பெயர்களைப்பற்றிய அறிவை வழங்கினான்**

*இவ்வகையில் நபிமொழிகளில் கூறப்பட்டுள்ளதாவது, ஹஜ்ரத் மூசா (அ) அவர்கள் ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களை வானுலகில் சந்தித்தபோது நீங்கள் அல்லாஹ் தஅலா தன்னுடைய கரங்களினால் படைத்து, உங்களுக்குள் தன்னுடைய ரூஹையும் செலுத்தி, உங்களுக்குத் தன்னுடைய மலக்குகளான வானவர்களை சஜ்தா செய்யும்படி கட்டளையிட்டு, உங்களுக்கு அனைத்தப் படைப்பினங்களைின் பெயர்களையும் கற்பித்த அந்த ஆதம் (அ) அவர்களாக இருக்கின்றீர்கள் என்று அன்புடன் கூறினார்கள் (அபூ தாவூத்).*

**இப்லீஸ் சஜ்தா செய்ய மறுத்துவிட்டான்**

*அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்கி வானவர்கள் ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுக்கு சஜ்தா செய்தனர், ஆனால், இப்லீஸ் சஜ்தா செய்ய மறுத்துவிட்டான். திருக்ஃகுர்அனில் இதனைப்பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது.*

فَسَجَدُوٓا۟ إِلَّآ إِبْلِيسَ لَمْ يَكُن مِّنَ ٱلسَّٰجِدِينَ ﴿١١﴾ قَالَ مَا مَنَعَكَ أَلَّا تَسْجُدَ إِذْ أَمَرْتُكَ ۖ قَالَ أَنَا۠ خَيْرٌ مِّنْهُ خَلَقْتَنِى
مِن نَّارٍ وَخَلَقْتَهُۥ مِن طِينٍ ﴿١٢﴾

*பொருள்: அவர்கள் அனைவரும் சிரம் பணிந்தார்கள், ஆனால், இப்லீசைத் தவிர, அவன் சிரம் பணிவோரில் ஒருவனாய் இருக்கவில்லை. சிரம் பணியும் படி நான் உனக்குக் கட்டளையிட்டபோது அதைச் செய்யவிடாமல் உன்னைத் தடுத்தது எது? என்று இறைவன் கேட்டான். அதற்கு இப்லீஸ்: நான் அவரை விட உயர்ந்தவன், நீ என்னை நெருப்பிலிருந்து படைத்தாய், அவரைக் களி மண்ணிலிருந்து படைத்தாய் என்று பதில் கூறினான் (அல் ஆராஃப்: 11,12)*

*அவன் தற்பெருமை மற்றும் கர்வத்தின் காரணமாக அல்லாஹ்வின் கட்ட ளைக்கு மாறு செய்ய முற்பட்டான். அல்லாஹ் தஆலா அவனுடைய கர்வம் மற்றும் மாறு செய்ததன் காரணமாக அவனை அங்கிருந்து வெளியேற்றி இறுதிநாள் வரை அவனை சபித்துத் துரத்தி விட்டான்.*

قَالَ فَٱخۡرُجۡ مِنۡهَا فَإِنَّكَ رَجِيمٞ ﴿٣٤﴾ وَإِنَّ عَلَيۡكَ ٱللَّعۡنَةَ إِلَىٰ يَوۡمِ ٱلدِّينِ ﴿٣٥﴾

*பொருள்: நீ இங்கிருந்து வெளியேறிவிடு, ஏனெனில், திண்ணமாக, நீ விரட் டப்படவேண்டியவனாய் இருக்கின்றாய். இனி, கூலி கொடுக்கப்படும் நாள் வரை உன்மீது சாபம் விதிக்கப்பட்டிருக்கும் (அல் ஹிஜ்ரு:34,35)*

**இப்லீஸ் ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுக்கெதிராக போர்ப்பிரகடனம்**

*ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுக்கு அளிக்கப்பட்ட மரியாதை மற்றும் கண்ணியத் தைக்கண்டு இப்லீசால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை, பொறாமையின் தீயின் எரிச்சலுக்கு ஆளாகி கர்வம் கொள்ள ஆரம்பித்தான். அவன் அல்லாஹ்வுக்கு முன்பாகச் சத்தியம் செய்து கூறினான், நான் ஆதம் (அ) மற்றும் அவருடைய சந்ததியினரை அனைத்து வகையிலும் வழிதவறச் செய்வேன் மற்றும் என்னு டைய பகைமையை எல்லா வகையிலும் கையாளுவேன். திருக்ஃகுர்ஆனில் ஹஜ்ரத் ஆதம் (அ) மற்றும் அவர்களுடைய சந்ததிகளுக்கு எதிராக ஷைத்தான் விட்ட சவாலை கீழ்க்காணும் வகையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.*

قَالَ فَبِمَآ أَغۡوَيۡتَنِي لَأَقۡعُدَنَّ لَهُمۡ صِرَٰطَكَ ٱلۡمُسۡتَقِيمَ ﴿١٦﴾ ثُمَّ لَأٓتِيَنَّهُم مِّنۢ بَيۡنِ أَيۡدِيهِمۡ وَمِنۡ خَلۡفِهِمۡ وَعَنۡ أَيۡمَٰنِهِمۡ وَعَن
شَمَآئِلِهِمۡۖ وَلَا تَجِدُ أَكۡثَرَهُمۡ شَٰكِرِينَ ﴿١٧﴾

*பொருள்: அதற்கு இப்லீஸ் கூறினான்: நீ என்னை வழிகேட்டில் ஆழ்த்திய காரணத்தால், திண்ணமாக, நானும் இம்மனிதர்களை உன்னுடைய நேரான வழியில் செல்லவிடாமல் தடுப்பதற்காகத் தருணம் பார்த்துக்கொண்டிருப்*

*பேன். பிறகு, அவர்களுக்கு முன்னாலும் பின்னாலும், வலப்புறமாகவும் இடப்புறமாகவும், அவர்களிடம் வந்து சுற்றி வளைத்துக்கொள்வேன். மேலும், அவர்களில் பெரும்பாலோரை நன்றி செலுத்துவோராக நீ காணமாட்டாய் (அல் ஆஃராஃப்:16,17).*

*அவன் இறுதிநாள்வரை இதற்கான அவகாசத்தை அல்லாஹ்விடம் கேட்டான் அல்லாஹ் தஆலாவும் அவனுக்கு அவகாசத்தைக் கொடுத்துவிட்டான், அத்துடன் இதனையும் கூறினான்:*

قَالَ ٱخۡرُجۡ مِنۡهَا مَذۡءُومٗا مَّدۡحُورٗاۖ لَّمَن تَبِعَكَ مِنۡهُمۡ لَأَمۡلَأَنَّ جَهَنَّمَ مِنكُمۡ أَجۡمَعِينَ ﴿١٨﴾

*பொருள்: அதற்கு அல்லாஹ் கூறினான்: நீ இழிந்தவனாகவும் விரட்டப்பட்டவனாகவும் இங்கிருந்து வெளியேறிவிடு. (உன்னையும்) அவர்களிலிருந்து உன்னைப் பின்பற்றுகின்றவர்கள் அனைவரையும் நரகில் போட்டு நிரப்புவேன் (அல் ஆஃராஃப்:18).*

*ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களை அல்லாஹ் தஆலா சுவர்க்கத்தில் தங்கியிருக்கச் செய்தான் மற்றும் அவருக்குச் சுகமான வாழ்க்கை அளிக்கும்பொருட்டு அவருடைய இடது விலாவிலிருந்து ஹஜ்ரத் ஹவ்வா (அ) அவர்களைப் படைத்தான். இருவரும் சுவர்க்கத்தில் தங்கியிருந்தனர், அல்லாஹ்வினால் அருளப்பட்ட அருட்கொடைகளைக்கொண்டு பயனடைந்து அனுபவித்தும் வந்தனர். அல்லாஹ் தஆலா அவர்களுக்கு விரும்பியவற்றையெல்லாம் உண்ணுங்கள், பருகுங்கள், ஆனால், இன்ன மரத்திற்கு அருகிலும் சென்றுவிடாதீர்கள் என்று அறிவுறுத்தியிருந்தான். ஆனால், இப்லீஸ் அவர்களை மயக்கி, அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து, அவர்களை நம்பவைத்துக் கூறினான், இந்த மரத்திற்கு அருகிலும் செல்லவேண்டாம் என்று உங்களுக்கு கூறியதன் காரணம் என்னவெனில், நீங்கள் மலக்குகளாக ஆகிவிடக்கூடாது அல்லது உங்களுக்கு முடிவில்லா வாழ்க்கை கிடைத்துவிடக்கூடாது என்பதற்காகவேதான். நீங்கள் அந்த மரத்தின் கனியை சாப்பிட்டுவிடுவீர்களானால், அது உங்களுக் மிக்கப் பலன் தரக்கூடியதாக ஆகிவிடும். இருவருமே அவனுடைய ஏமாற்றும் தந்திரத்திற்கு ஆளாகி முழுமையாகவே நம்பிவிட்டார்கள். எனெனில், ஒருவன் அல்லாஹ்வின் பெயரால் சத்தியம் செய்து பொய்யைக் கூறுவான் என்று அவர்கள் நினைத்தும் பார்க்கவில்லை. அந்தக் குறிப்பிட்ட மரத்தின் கனியை அவர்கள் சாப்பிட்டுவிட்டவுடன் இருவருடைய அந்தரங்க உறுப்புக்கள் தென்படலாயின, அவர்கள் வெட்கத்தின் காரணமாக மரங்களின் இலைகளைக்கொண்டு தங்களை மறைத்துக்கொள்ள ஆரம்பித்தனர். இவ்வகையில், இப்லீஸ் அவர்களை அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்பவர்களாக ஆக்கிவிட்டான்.*

## ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களின் பாவமன்னிப்பு

*ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுடைய இறைவன் கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் ஏற்பட்டுவிட்ட தவறின் காரணமாக அல்லாஹ் தஆலா அவர்களிடம் கேள்வி கேட்டு அதன்பின் கூறினான்:*

أَلَمْ أَنْهَكُمَا عَن تِلْكُمَا ٱلشَّجَرَةِ وَأَقُل لَّكُمَآ إِنَّ ٱلشَّيْطَٰنَ لَكُمَا عَدُوٌّ مُّبِينٌ ﴿٢٢﴾

*பொருள்: இம்மரத்தின் அருகில் செல்வதைவிட்டு உங்கள் இருவரையும் நான் தடுக்கவில்லையா? மேலும், ஷைத்தான் உங்களின் வெளிப்படையான பகைவனாவான் என்றும் நான் உங்களுக்குக் கூறவில்லையா? (அல் ஆஃராஃப்:22).*

*இந்தனைக் கேட்டு தம்முடைய செயலின் காரணமாக ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்கள் மிகவும் வெட்கப்பட்டார்கள் மற்றும் அல்லாஹ் தஆலாவிடம் பாவ மன்னிப்புக் கோரினார்கள். அல்லாஹ் தஆலா அவனுடைய நிகரற்ற கருணை யினால் அவர்களுக்குப் பாவமன்னிப்புக் கோருவதற்கான முறை மற்றும் அதற்கான வாசகத்தினையும் கற்றுக்கொடுத்தான், அவர்களுடைய பாவ மன்னிப்புக்கான கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டான். ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்கள் பாவமன்னிப்புக் கோரிய அந்தச் சொற்களையும் திருக்ஃகுர்அனில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:*

قَالَا رَبَّنَا ظَلَمْنَآ أَنفُسَنَا وَإِن لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ مِنَ ٱلْخَٰسِرِينَ ﴿٢٣﴾

*பொருள்: அதற்கு அவர்களிருவரும் கூறினார்கள்: எங்கள் இறைவனே, எங்க ளுக்கு நாங்களே அக்கிரமம் செய்துகொண்டோம், எங்களை நீ மன்னித்து எங்களுக்குக் கிருபை செய்யாவிடில், நிச்சயமாக, நாங்கள் இழப்புக்குரிய வர்களாகிவிடுவோம் (அல் ஆஃராஃப்:23).*

*இந்த நிகழ்வுக்குப்பிறகு, ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்கள், ஹஜ்ரத் ஹவ்வா (அ) அவர்கள் மற்றும் அவர்களுடைய நிரந்தரப் பகைவனான இப்லீசையும் பூமி யில் இறங்கிவிடுமாறு கட்டளையிடப்படுகின்றது. மேலும், அவர்களுடைய இந்த பகைமையினைப்பற்றி தெளிவாக எடுத்துக்கூறி, இனி நீங்கள் அனை வருமே பூமியில்தான் தங்கி வாழவேண்டும் என்றும் கூறப்படுகின்றது. உங்க*

ளுடைய தேவைகளுக்கான அனனைத்துப் பொருட்களும் கிடைக்கும் என்றும் கூறப்பட்டது. ஆனால், இவையனைத்தும் ஒரு குறிப்பிட்டக் காலக்கட்டம் வரை மட்டுமே இருக்கும். அல்லாஹ் தஅலா ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களை பூமிக்கு அனுப்பும்போது மேலும் கூறினான், எம்மால் அவ்வப்போது அனுப் பிவைக்கப்படும் நேர்வழி மற்றும் வழிகாட்டுதல்களுக்கேற்பக் கீழப்படிந்து நடப்பவர்களுக்கு அங்கே எவ்வித அச்சமும் கவலையும் ஏற்படாது. ஆனால், எவர்கள் எம்முடைய அத்தாட்சிகளையும் அருள்வாக்குகளையும் நிராகரித்து மாறு செய்யும் போக்கினைக் கடைபிடிப்பார்களோ, அவர்கள் அனைவரை யும் நாம் நரகத்தில் போட்டுவிடுவோம். இதனைத் திருக்ஃகுர்ஆன் இவ் வாறு கூறுகின்றது:

فَإِمَّا يَأْتِيَنَّكُم مِّنِّى هُدًى فَمَن تَبِعَ هُدَاىَ فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ﴿٣٨﴾ وَٱلَّذِينَ كَفَرُوا۟
وَكَذَّبُوا۟ بِـَٔايَـٰتِنَآ أُو۟لَـٰٓئِكَ أَصْحَـٰبُ ٱلنَّارِ ۖ هُمْ فِيهَا خَـٰلِدُونَ ﴿٣٩﴾

பொருள்: பிறகு, உங்களுக்கு என்னிடமிருந்து நேர்வழி கிடைக்கும்போது யார் எனது நேர் வழியைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு எவ்வித அச்ச மும் இல்லை. அவர்கள் துயரப்படவும் மாட்டார்கள். அன்றி, யார் (அதை) ஏற்றுக்கொள்ள மறுத்து எம்முடைய வசனங்களைப் பொய்யென்று கூறுகின்றார் களோ அவர்கள்தாம் நரகவாசிகள், அவர்கள் அதிலேயே என்றென்றும் வீழ்ந்து கிடப்பார்கள் (அல் பஃகரஹ்:38,39)

அன்று முதல் இன்று வரையிலும் பூமியின்மீது மனிதர்கள் மற்றும் இப்லீ சுக்கு இடையிலான போர் தொடர்கின்றது. தத்தம் வழித்தோன்றல்களான மக்களைப் பெற்றெடுக்கும் நிலையும் அன்றிலிருந்தே ஏற்பட்டுவிட்டது. இவ் வகையில், ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்கள் மனித இனத்தவர்கள் அனைவரு டைய ஆதிப்பிதாவாகவும் அனைத்து மனிதர்களுடைய பொதுவான பகை வனாக ஷைத்தானும் ஆகிவிட்டனர். அல்லாஹ்வின் புறமான வழிகாட்டு தல்கள் மற்றும் நேர்வழிக்கான அருள்வாக்குகளை நபிமார்களும் இறைத் தூதர்களும் தொடர்ந்து கொண்டுவந்துகொண்டிருந்தனர். இதனை ஏற்றுக் கீழ்ப்படிந்து நடப்பது மற்றும் நிராகரிப்பின் அடிப்படையில்தான் மனிதர் களில் இரு பிரிவுகள் உண்டாகிவிட்டன. ஒரு பிரிவினர் விசுவாசம் கொள் பவர்கள், அதா வது அல்லாஹ்வின் நல்லடியார்கள் மற்றும் இரண்டாவது பிரிவு நிராகரிப் பாளர்களான ஷைத்தானைப் பின்பற்றி நடப்பவர்கள்.

**ஹஜ்ரத் அதம் (அ) அவர்களைப்பற்றிய செய்திகளிலிருந்து கீழ்க்கானும் உண்மைகள் தெளிவாகின்றன**

- *ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுடைய படைப்பு ஒரு மகத்தான திட்டத்தின் படி நடந்துள்ளது*
- *ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுடைய மேன்மை அவர்களுக்கு அளிக்கப் பட்ட அறிவின் அடிப்படையிலானது*
- *ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்கள் அல்லாஹ்வினால் நியமிக்கப்பட்ட க்ஹலீஃபாவாக இருக்கின்றார்கள்*
- *ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்கள் வானவர்களால் சிரம்பணிந்து மரியாதை செலுத்தப்பட்டவர்*
- *ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களை அல்லாஹ் தஆலா தன்னுடைய கரங்களினால் படைத்து, அவருக்குள் தன்னுடைய ரூஹையும் (ஆவி) ஊதினான்.*
- *ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுடைய மக்கள் சுவர்க்கவாசிகளே, அவர்கள் இவ்வுலகத்தில் ஒரு காலக்கட்டத்திற்காக அனுப்பப்பட்டள்ளனர், பின்பு மீண்டும் அவர்கள் அங்கேயே செல்லவேண்டும். இருப்பினும் அவர்கள் அதற்கான உரிமை மற்றும் தகுதியினை நிரூபிக்கவேண்டியிருக்கும். அதற்கான ஆதாரம் இறைவனுக்குக் கீழ்ப்படிந்து அவனை தூய மனதுடன் வணங்கி இபாதத்து செய்வதாகும்*
- *இப்லீஸ் ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுக்கு சிரம் பணியாமல் மறுத்து கர்வத்தைக் கடைபிடித்தான், அதன் காரணமாக அல்லாஹ்விடத்தில் அவனுக்கு இருந்த உயர் அந்தஸ்திலிருந்து விலக்கி தூக்கி எறியப்பட்டான்*
- *இப்லீஸ் மனிதர்களுடைய (ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுடைய மக்கள்) நிரந்தர பகைவனும் விரோதியுமாவான். அவன் எப்போதுமே ஆதமுடைய மக்கள் தங்களுடைய விசுவாசம் மற்றும் நற்கருமங்களின் அடிப்படயில் மீண்டும் சுவர்கத்திற்குச் செல்லும் உரிமையினைப் பெற்றவர்களாக ஆகிவிடுதை விரும்புவதே இல்லை*
- *இப்லீஸ் ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்கள் மற்றும் அவர்களுடைய மக்கள் அனைவரையும் இறுதிநாள் வரை வழிகேட்டிற்குக் கொண்டு செல்வதற்கான அவகாசத்தை அல்லாஹ்விடமிருந்து கேட்டுப் பெற்றுள்ளான், அல்லாஹ்வும் அவனுக்கு அவகாசத்தை அளித்தள்ளான்*
- *இந்த உலகம் மனிதர்கள் மற்றும் இப்லீசுக்கு இடையிலான போர்க்களத்தைப் போன்றதாகும்*
- *அல்லாஹ் தஆலா தன்னுடைய மகத்தான கருணை மற்றும் அருளைக் கொண்டு இந்த யுத்தத்தில் மனிதர்கள் வெற்றி காணும் வகையில் தன்னு*

டைய வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து தன்னுடைய நபிமார்கள் மற்றும் இறைத்தூதர்களின் மூலம் அனுப்பி வைத்துள்ளான்.

- இந்தப் பூவுலகில் மனித குலத்தாரின் ஆரம்பம் அல்லாஹ்வினால் அருளப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் நேர்வழியின் பிரகாசத்தில் ஆனது. இவ்வகையில், பிற்காலத்து அறிஞர்களுடைய கருத்தான மனிதன் ஆரம்பத்தில் எண்ணற்ற கடவுள்களின்மீதான நம்பிக்கையினைக் கொண்டிருந்தான், படிப்படியாக அறிவாற்றல்களின் வளர்ச்சியின் பலனாக ஏகத்துவத்தின் உண்மையைக் கண்டறிந்து, அதன்பின் தன்னுடைய பகுத்தறிவே உயர்ந்தது என்ற நிலையினை அடைந்து அவன் கடவுளை நம்புவதே தேவையற்றது என்று கைகழுவிவிட்டான்.
- ஹஜ்ரத் ஆதம் (அ) அவர்களுடைய மக்களை நேர்வழியிலிருந்து விலக்கி வழிதவறச்செய்யும் ஷைத்தானுடைய அணுகுமுறை யாதெனில், அவன் எப்போதுமேநேரடியாகவேஇணைவைக்குமாறுகூறுவதில்லை,மாறாக, அவன் மனிதனுடைய மனதில் குழப்பத்தையும் ஊசலாட்டத்தையும் போட்டுவிடுகின்றான். தீமையானபாவச்செயல்களை அழகானவையாக அலங்காரமாக்கிக் காட்டுகின்றான். மனிதர்களுடைய இயல்பான பலவீனங்களையே ஆதாரமாகக்கொண்டு முதலில் அவன் அவர்களை நேர்வழியிலிருந்து விலக்கிவிடுகின்றான், அதன்பின், முழுமையாகவே அவர்களை வழிகேட்டில் போட்டுவிடுகின்றான். உதாரணமாக, முதலில் பகைமை உணர்வைத் தூண்டிவிடுகின்றான், பொறாமையை கட்டவிழ்த்துவிடுகின்றான், அவனை உணர்ச்சிவசப்படுபவனாக ஆக்கிவிடுகின்றான். எதனையும் எவ்வகையிலும் உடனே அடையவேண்டும் என்று விரும்பும் மனநிலையை ஏற்படுத்துகின்றான். கர்வம் மற்றும் தற்பெருமையின் மூலமாக மனதில் குழப்பத்தையும் வேற்றுமை மனப்பான்மை வேரூன்றச் செய்துவிடுகின்றான். சோம்பல் மற்றும் இச்சைகளுக்கு அடிமையாக்கி, ஆபாச மற்றும் கேவலமான செயல்களைச் செய்யத்தூண்டிவிடுகிறான். பொய், கபடம், புறம்பேசுதல், பழி சுமத்துதல், பேராசை, நயவஞ்சகம், தனி நபரைப் போற்றும் பழக்கம் ஆகிய தீய வழக்கங்களையும் வேரூன்றச்செய்துவிடுகின்றான். இவ்வகையில், ஒரு மனிதனுடைய பண்புகள் சீரான நடைமுறையிலிருந்து விலகிவிடும் நிலையில் அவன் இந்த பல்வேறு காரணக்கூறுகளையும் ஆதாரங்களையும் அடிப்படையாகக் கொண்ட இந்த உலகில் குழப்பங்ளை கட்டவிழ்த்துவிடும் ஒரு தொழிற்சாலையே உருவெடுக்கின்றது, இறுதியில் இறைமறுப்பு மற்றும் இணைவைப்பின் பல்வேறு வகையான கொள்கைகளே உற்பத்தி செய்யப்பட்டு இவ்வகையில், அவனுடைய விருப் பமும் நிறைவேறிவிடுகின்றது.

* * *